<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No. 583/2020 பெயர்- சம்பத் நாள்.26.06.2023

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். மோகன்ராஜ் எனக்கு பணம் தரவேண்டும், அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்பட்டது. 17.06.2020 ம் தேதி அனுப்பப்பட்டுள்ளது. 22.06.2020 ம் தேதி துளசியம்மாள் அதை பெற்றுக்கொண்டார். அதற்கு பதில் அறிவிப்பு வந்ததா என்றால் அது எனக்கு நினைவு இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டதில் இருந்து ஒரே வழக்கறிஞர்தான் எனக்கு ஆஜராகி வருகிறாரா என்றால் ஆமாம். எனக்கு வருட வருமானம் எவ்வளவு என்றால் வருடத்திற்கு சுமார் 50,000/- வரும். எனக்கு சொத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல, 3 1/2 ஏக்கர் காடு உள்ளது. எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 46 புதூர் கிராமத்தில் உள்ளது. பத்திரத்தை பார்த்தால்தான் சர்வே எண் தெரியும். மோகன்ராஜை தவிர வேறு யாருக்கெல்லாம் கடன் கொடுத்துள்ளேன் என்றால் வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டவைதான். நான் ஊருக்கு செல்லும் வகையில் அடிக்கடி பார்த்த வகையில் மோகன்ராஜ் எனக்கு பழக்கம். அனுமன்பள்ளியில் உள்ள என் மாமனார் வீட்டிற்கு போய் வந்த வகையில் மோகன்ராஜ் எனக்கு பழக்கம். மோகன்ராஜின் வீட்டிற்கு போயுள்ளேன் என்றால் போயுள்ளேன். மோகன்ராஜின் வீடு வடக்கு பார்த்த வீடு, கிழக்கு பார்த்த நடை. மோகன்ராஜ்க்கு சொத்து எவ்வளவு உள்ளது என்று தெரியுமா என்றால் காடு உள்ளது என்று தெரியும், ஆனால் எங்கு, எவ்வளவு உள்ளது என்பது தெரியாது. மோகன்ராஜ் உடன் பிறந்தவர்கள் 2 பெண்கள். மோகன்ராஜ் இறக்கும்போது அவருடைய வயது என்னவென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மோகன்ராஜ் திருமணம் ஆனவரா என்றால் திருமணம் ஆகாதவர். மோகன்ராஜ் எப்போது இறந்தார் என்பது தெரியுமா என்றால் 11.04.2020 ஆகும். என்ன காரணத்தினால் இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மோகன்ராஜ் மருத்துவ சிகிச்சையில் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. சின்னப்பகவுண்டர் மகன் பழனிச்சாமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரும், இறந்துபோன மோகன்ராஜ் ஒரே ஊர் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் உறவினர்களா என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பழனிச்சாமி என்னுடைய மைத்துனர் ஆவார். மேற்படி பழனிச்சாமியும் என்னைபோலவே மோகன்ராஜ்க்கு பணம் கொடுத்ததாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பழனிச்சாமி மோகன்ராஜ்க்கு எவ்வளவு பணம் எவ்வளவு வட்டிக்கு கொடுத்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. மேற்படி பழனிச்சாமியிடம் இந்த வழக்கிற்கு பின்னிட்டுதாவது மோகன்ராஜ் பற்றி கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி பழனிச்சாமிக்கும், எனக்கும் நல்ல உறவு முறை என்றால் போக்குவரத்து சரியல்ல. மேற்படி என்னுடைய மைத்துனர், பழனிச்சாமியும், நானும் தற்சமயம் வரை ஒரே வழக்கறிஞர் வைத்துதான் வழக்கு நடத்திக்கொண்டு வருகிறோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கும், பழனிச்சாமிக்கும் ஒரே வழக்கறிஞர் மூலமாக ஒரே தேதியில் மோகன்ராஜால் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது தெரியும், பழனிச்சாமிக்கு அனுப்பப்பட்டது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு வந்த பதில் அறிவிப்பை வழக்கறிஞர்தான் பெற்றார், என்ன சொல்லப்பட்டது என்ற விவரத்தை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி பதில் அறிவிப்பிலேயே தாவா பிராமிசரிநோட்டின் நகலை மோகன்ராஜ்க்கு அனுப்புமாறு கேட்கப்பட்டிருந்தது என்பது எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி பதில் அறிவிப்பை பெற்றதற்கு பின்னிட்டு 10 நாட்கள் கழித்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில் மேற்படி பதில் அறிவிப்பை குறித்ததான சங்கதிகள் இந்த வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. நான் என்னுடைய வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் ஒருமுறைகூட என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியை அங்கு பார்த்தது கிடையாது. மேற்படி என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியால் மோகன்ராஜ்க்கு கடன் கொடுத்ததாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலும், இந்த வழக்கிலும் 02.08.2020 வரை வட்டி குறிப்பிட்டு இரு வழக்கிலும் ஒரே நாளில், ஒரே வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. பிரதிவாதி தரப்பில் எதிர் உரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்த விவரங்கள் வழக்கறிஞர் மூலமாக தெரிந்துகொண்டேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)